
நமது ஈழநாடு
www.namathueelanadu.com



குரல் 03 மலர் 25 செப்டெம்பர் 2022 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com



Simply Scan the QR code
Your Phone Camera
Download the
NamathuEelanadu app

"திலீபனின் தியாகம் இந்திய மாயையை கலைத்தது, தமிழ்த்தேசிய உணர்வை தட்டியெழுப்பியது"
-தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

# விடுதலைத் தீ மூட்டியோன்



நமது ஈழநாடு
www.namathueelanadu.com





# திலீபன் நினைவுகள்

திலீபனின் அரசியல் ஆசிரியர்
மு.திருநாவுக்கரசு

மக்களின் நல்வாழ்விற்காகவும், அவர்களின் மேன்மைக் காகவும், உரிமைக்காகவும் தண்ணீர், வெந்நீர்கூட அருந்தாது திலீபன் தன்னுயிர் ஈந்த அந்த மண்ணில், இன்று தமிழ் இளைஞர்கள் குடிவெறிக்கு உள்ளாகி போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளார்கள் என்ற செய்தியானது பெரும் அதிர்ச்சியையும் வேதனையும் அளிக்கிறது. திலீபனைப் பற்றிய நினைவுகள் இத்தகைய இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் என்று நம்புவோமாக.

**'அவனை சாகவிட விரும்பும் ஒவ்வொருவரும் அறிக...**
**அவனது பசி வலியது.**
**அவனது தாகமும் வலியது.**
**ஆனால் அவற்றிலும் வலியது**
**அவனது சனங்களின் கோபம்...'**

என்று திலீபன் சாகும்வரையான உண்ணாவிரதம் இருந்து கொண்டிருந்த போது அவரது நண்பன் திரு. ம.நிலாந்தனால் எழுதி வெளியிடப்பட்ட கவிதை அடிகளே இவை.

திலீபனை உண்ணாவிரதம் இருக்க அமர்த்தியவர்களில் ஒருவரான கவிஞர் காசிஆனந்தன் அந்த உண்ணாவிரத மேடையில் பாடிய கவிதை அடி பின்வருமாறு அமைந்தது.

**'திலீபன் அழைப்பது சாவையா? - இந்த**
**சின்னவயதில் இது தேவையா?'**

திலீபன் எனது அரசியல் மாணவன். பிள்ளையைப் பற்றி தாய்-தந்தையர் புரிந்திருப்பதைவிடவும் அந்தப் பிள்ளையைப் பற்றி ஓர் ஆசிரியன் புரிந்திருக்கக்கூடியது அதிகம். ஆதலால் திலீபனைப் பற்றி நான் எழுதக்கூடிய குறிப்பு ஒருபுறம் இரத்தமும், தசையானதாகவும் மறுபுறம் அறிவியல் பரிமாணம் கொண்டதாகவும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

திலீபனது சொந்தப் பெயர் பார்த்தீபன். எனக்குப் பல புனைபெயர்கள் உண்டு. அவற்றில் ஒன்றான 'திலீபன்' என்ற பெயரையே தனக்கான புனைபெயராக சூடிக் கொண்டான். திலீபன் என்ற புனைபெயரை நான் உணர்வுபூர்வமாக எனக்கு தேர்ந்தெடுக்கவில்லை. என்மீது அன்புள்ள ஒருவராக பல்கலைக்கழக விரிவுரையாளரான கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் விளங்கினார்.

'திலீபன்' என்ற வடமொழிப் பெயரின் பொருள் 'இதயத்தை வென்றவன்' என்ற விளக்கத்தை அவர் என்னிடம் கூறியதுடன் காண்டேகர் எழுதிய 'கிரகஞ்சவதம்' என்ற நாவலில் வரும் கதாபாத்திரத்தின் பெயர் திலீபன் என்றும் அது தனக்கு மிகவும் பிடித்த பெயர் மட்டுமல்ல, நல்ல பாத்திரமும் என்று என்னிடம் கூறி அப்பெயரை வைக்குமாறு சொன்னார். அதன்படி திலீபன் என்ற பெயரில் சிறிதுகாலம் எழுதினேன். எனது இப்பேரின் வரலாற்றை அறிந்துகொண்ட திலீபன் தனக்கும் இப்பெயரை சூடவிரும்பி உணர்வுபூர்வமாக தேர்ந்தெடுத்துக் கொண்டான். உண்மையிலேயே தான் சூடிக்கொண்ட பெயருக்கேற்ப தன் வாழ்விலும் வரலாற்றிலும் மக்களின் இதயங்களை வெற்றவனானான்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் முதலாவது அரசியற் பொறுப்பாளரும் எனது மாணவனுமான சுகந்தனால் 'திலீபன்' இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். 'சுகந்தன்' இராணுவத்தால் பிடிபட்டு சயனைட் அருந்தி தன்னுயிரை தியாகம் செய்து கொண்டான்.

சுகந்தனின் நண்பன் கந்தையா அண்ணைக்கு அடுத்து அப்பதவிக்கு 'திலீபன்' நியமிக்கப்பட்டான். திலீபனை 'கந்தையா அண்ணை' என்னிடம் கூட்டிவந்து பல்கலைக்கழக நூலக முன் மண்டபத்தில் வைத்து என்னிடம் அவர் புதிதாக பதவியேற்றுக் கொண்டதை அறிவித்தார். நாம் மூவரும் நூலகத்தைவிட்டு வெளியே வந்தோம். நாம் பல்கலைக்கழக சிற்றூண்டிச் சாலைக்குள் பிரவேசித்தோம். கொதிக்கும் தேனீரும் சுவைத்தபடி கொதிக்கும் அரசியலை பேசினோம். திலீபனின் அப்பதவியேற்பு நல்லூர் வீதியில் நெருப்பாறாய் ஓடுவதில் முடியுமென்று அப்போது சிறிதும் நினைத்திருக்கவில்லை.

இலங்கை அரசியல் முற்றிலும் இராணுவமயமாகிவிட்ட காலம் அது. துப்பாக்கிகள் மட்டுமே பேசத் தொடங்கிவிட்ட காலம் அது. எங்கும், எதிலும், எப்போதும் துப்பாக்கிகளே நிர்ணயகரமான பாத்திரம் வகிக்கத் தொடங்கிவிட்ட காலம் அது. இத்தகைய காலப் பின்னணியில் திலீபன் தண்ணீர் குடிக்காது சாகக்கூடும் என்று எண்ணிப்பார்க்க இடம் இருந்திருக்காத காலம் அது. தேனீர் வயிற்றுள் இறங்குகிறது. வார்த்தைகள் வெளியே வந்துகொண்டிருக்கின்றன. 'மிகவும் நெருக்கடி மிகுந்த காலத்தில் இந்தப் பதவியை ஏற்றுள்ளாய்' என்றேன். அப்போது அவன் கூறினான் 'உண்மைதான்', ஆனால் அதுமட்டுமல்ல 'என் வயதுக்கு மீறிய பதவியை பொறுப்பேற்றுள்ளேன்' என்று தன்னியல்புடன் கூறினான்.

திலீபனுக்கு தந்தையும் இரண்டு அண்ணாக்களும் இருந்தனர். தாய் இறந்துவிட்டாள். அவனுக்கு தாயின் அரவணைப்பும் கிடைக்கவில்லை பெண் சகோதரிகளும் இருக்கவில்லை. இதன் பின்னணியில் வளர்ந்த அவனிடம் தாய்மாரின் மீதும் பெண்கள் மீதும் எப்போதும் தனித்துமான மதிப்பும் அன்பும் இருந்தது. அவன் இயல்பில் ஒரு தூய்மைவாதியாக காணப்பட்டான். புகைத்தல், மதுப்பழக்கம் என்பன சிறிதும் இல்லாதவன் மட்டுமல்ல, அதனை ஒரு கொள்கையாகக் கொண்டு அத்தகைய தீய பழக்கங்களை எதிர்த்தும் வந்தான். அத்துடன் பெண்களுக்கென அவனது மனதில் ஒரு புனிதமான இடம் முழுமையாகவே இருந்தது. அவனுடன் அதிகம் நெருங்கிப் பழகிய ஓர் ஆசிரியன் என்ற வகையில் இவற்றை என்னால் முற்றிலும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

திலீபன் அறிவியல் மீது ஆர்வம் கொண்டவன். திறமை மிக்கவன், சமூகப் பற்றுள்ளவன், பண்பாட்டை நேசிப்பவன், கண்ணியமானவன், விடுதலைவிரும்பி, அர்ப்பணிப்பு மிக்கவன், அயராது செயற்படும் இயல்புள்ளவன், அவனது மணிக்கூட்டில் இரவு என்பது இருக்காது. என்னை அவன் இரவு ஒரு மணி, இரண்டு மணி - பல வேளைகளில் அதைத்தாண்டியும் சந்திக்க வருவான். விளையாட்டிலும் ஆர்வமுள்ளவன். குறிப்பாக சதுரங்க விளையாட்டில் திறமையுள்ளவன் என்று எனக்கு சொல்லப்பட்டது. ஆனால் அது பற்றிய நேரடி அனுபவங்கள் என்னிடம் இல்லை.

திலீபனுக்கு பெண்கள் மீது இருந்த அதியுயர்ந்த மதிப்பும் மற்றும் போதைப் பொருட்கள் மீது அவனுக்கு இருந்த பெருவெறுப்பும் அப்பழுக்கற்றவை. திலீபனது இந்த நினைவுநாட்களில் அத்தகைய நினைவின் பேரால் போதைப் பொருள் பாவனையை கைவிடவும், அத்தகைய தீயபழக்கத்தை எதிர்க்க முனைவதுமே திலீபனுக்கு இளைஞர்கள் செலுத்தக்கூடிய காணிக்கையாகும்.

தற்போது முழு இலங்கையிலும் அதிகூடிய மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனை கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுகின்றது என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக மட்டுமன்றி அது எமது பண்பாட்டு இதயத்தின் மீது விழுந்த ஒரு பேரிடியாகவும் காணப்படுகிறது.

திலீபனும் அவனது நெருக்கமான சகாவான ராஜனும் என்னை திடீரென சந்தித்தனர். 'என்ன அவசரம்' என்று கேட்டேன். இயல்பில் திலீபன் பொறுமையற்றவன். ஆனால் நான் கேட்டபின்புதான் அவன் வாய்திறக்க தொடங்கினான்.

'நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன், என்ன நடக்கும்?' என்று கேட்டான்.

எனக்கு வார்த்தைகள் வர நேரம் எடுத்தன. எப்படியோ உரையாடல் தொடர்ந்தது. அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதை ஏற்க மறுத்தேன்.

உரையாடலின் ஒரு கட்டம் இவ்வாறுதான் அமைந்தது. 'சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்ற உனது முடிவை ஏற்க முடியாது. அதற்குப் பதிலாக கட்டம் கட்டமாகவும், அணியணியாகவும் சங்கிலித் தொடர் உண்ணாவிரதங்களை மேற்கொள்ளலாம். ஓர் அணிக்குப்பின் இன்னொரு அணியென மூன்று நாள் இடைவெளியில் கட்டம் கட்டமாக உண்ணாவிரத்தை மேற்கொள்வதுதான் நல்லது. இப்படிச் சாகும்வரை உண்ணாவிரதம் வேண்டாம். அப்படி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்காது கட்டம் கட்டமாக இருப்பதன் மூலம் மக்களை அதில் பங்கெடுக்கச் செய்யவும், அணிதிரட்டவும் முடியும்.

இதனை முதலாவதாக என்னுடன்தான் கதைப்பதாக திலீபன் கூறினான். இனிமேற்தான் மேற்கொண்டு அடுத்த நடவடிக்கை என்றான். அப்படியென்றால் நல்லது, மேற்கொண்டு யாருடனும் கதைக்காமல் இத்துடன் நிறுத்திவிடு என்று பலவறாக கூறி வற்புறுத்தினேன்.

அவன் கரும்புலி மில்லரை நினைவு கூர்ந்து ஒரு பிரசங்கத்தையே எனக்குச் செய்தான். அதன் சாராம்சம் பின்வருமாறு அமைந்தது. மில்லருக்கு இறுதி விடை கொடுத்து அனுப்பியது தான்தான் என்றும் அவ்வாறு அவனுக்கு தான் இறுதிவிடை கொடுக்கும் தருணத்தில், மில்லர் தன் சட்டைப் பைக்குள் இருந்த பணத்தை எல்லாம் உருவியெடுத்து அதற்கு குளிர்பானம் வாங்கி தன்னுடன் நின்ற ஏனைய போராளிகளுக்கு கொடுக்குமாறு கொடுத்ததாக கூறினான். (அப்போது போராளிகள் மேற்படி குளிர்பானங்களை அருந்துவதில் கட்டுப்பாடுகள் இருந்தன.)

இறுதியாக கரும்புலி மில்லர் தன்னிடமிருந்து இறுதி விடைபெறும்போது மில்லரைப் பார்த்து தான் பின்வருமாறு கூறியதாக என்னிடம் கூறினான்.

அதாவது 'நீ முன்னாலே போ, நான் பின்னாலே வாறேன்'. இவ்வாறு தான் வழியனுப்பி வைத்த பொறுப்புக்கு ஏற்ப தான் போராட்டத்தை இன்னொரு வடிவில் தொடர்வதற்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக உறுதிபடக் கூறினான். 'சாவு நிச்சயம்' என்று நான் கூறியதை அவன் ஏற்றுக்கொண்டான். ஆனால் அவன் தன் முடிவில் மாற்றம் செய்ய தயாராக இருக்கவில்லை. அடுத்து அவன் தலைமைப்பீடத்தை நாடப்போவதாக என்னிடம் கூறிவிட்டு புறப்பட்டான்.

இதன் பின்பு நடந்தவற்றை ராஜன் பின்வருமாறு என்னிடம் கூறினான்.

பின்பு திலீபனும், ராஜனும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மிகவும் அண்மையில் உள்ள அவரது மறைவிடத்திற்குச் சென்றனர். திலீபன் மட்டும் அவரை உள்ளே சென்று சந்தித்தான். ராஜன் வெளியே காவல் நின்றான். சுமாராக ஒரு மணித்தியாலத்திற்கும் மேற்பட்ட உரையாடலின் பின்பு வெளியே வந்த திலீபன் அனுமதி பெற்றுவிட்டதாக ராஜனிடம் கூறினான்.

# ஜெனீவா அமர்வு
# நீதிக்காகத்தான் கூடுகிறதா?

நம் நாடுகளில், அரசியலமைப்புக்களில் நீதி என்ற வார்த்தை அதன் அர்த்தம் வெளிப்படுமாறுதான் பயன்படுத்தப்படுகிறதா? இந்தக் கேள்வியை எழுப்புகிற ஒரு சமான்யன் பெருத்த ஏமாற்றத்தைத்தான் எய்துகிறான். நமக்கெதிரான அநீதிகள் முதலில் நீதியின் பெயரால்தான் நிகழ்கிறது. பெரும்பாலான நாடுகளில் பெரும்பாலான சமூகங்களில் இதுதான் நடக்கிறது. இலங்கையில் தமிழர் ஒருவராய் இருத்தல்தான் அநீதி எனப்படுகிறது என்றால் நீதியின் உண்மையான பொருளை நாம் இந்த நாட்டில் தேட முடியுமா? நமக்கெதிரான யுத்தமே இங்கு நீதியின் பெயரால்தான் நிகழ்த்தப்பட்டது என்பது எத்துனை பெரிய அபத்தம்.

ஆனால் நாம் ஒன்றை உறுதியாக நம்ப வேண்டி இருக்கிறது. ஒரு ஒளியைக் கண்டுபிடிப்பதுபோல நாம் நீதியைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதற்காக நாம் என்ன செய்கிறோம் என்பதை ஒவ்வொரு ஈழத் தமிழ் நெஞ்சமும் கேட்டுக்கொள்ள வேண்டும். இனவழிப்புப் போரினால் ஈழ மண்ணில் உள்ள அத்தனை குடும்பங்களும் அத்தனை மனிதர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் வலி கூட்டு வலி. எங்கள் வலி ஒரு தேசத்தின் வலி. எங்கள் அத்தனை பேருக்குமான வலியிற்கு ஒரு மருந்துதான் இருக்கிறது. அது நீதிதான். எங்கள் காயங்களுக்கான ஒற்றை மருந்தே அதுதான். இந்த நீதியை வலியுறுத்தும் குரலே நலிந்த ஒரு தாயின் மடியில் இருந்துதான் பிறக்கிறது. போரின் தன் துணைவனை பறிகொடுத்த ஒரு பெண்ணின் அடிக்குரலில் இருந்துதான் துவங்குகிறது.

எங்கள் மண் சர்வதேசத்தை ஒரு மலைப் போலப் பார்த்து காத்துக் கிடக்கிறது. காலனிய ஆட்சியும் இலங்கைத் தீவின் அரசியல் அமைப்பும் நாம் கடந்து வந்த இனப்படுகொலை வரலாறும் இந்த எதிர்பார்ப்பைதான் நமக்கான வழியாக திறந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக மக்களை பாதுகாக்கின்ற ஒரு பொது அமைப்பாக - ஒரு பொது அரசாக சொல்லப்படுகிற ஒரு சூழலில்தான் ஈழ இனவழிப்புப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதிக்கும் எல்லா அநீதிகளுக்குமான நீதிக்கும் அவ் அமைப்பை நோக்கி எதிர்பார்த்தி ருக்கிறோம். வருடத்தில் வருகின்ற மார்ச் மாதங்களிலும் செப்டம்பர் மாதங் களிலும் எங்கள் கண்கள் ஜெனீவாவை நோக்கி அகலத் திறக்கின்றன.



தீபச்செல்வன்

அம்மையார் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் கடந்த பல வருடங்களாக சர்வதேச பிரதிநிதிகள் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். இலங்கையின் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் இது சார்ந்து தமது அதிருப்திகளை வெளியிட்ட போதும் சர்வதேசத்தின் கைகளில் முறையான புள்ளி விபரத் தரவுகள் கையளிக்கப்படவில்லை.

ஜெனீவா அமர்வையும் ஐக்கிய நாடுகள் சபை ஆணையாளரின் அறிக்கையையும் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு தரப்பில் ஒரு குழு பயணம் செய்துள்ளது. அலி சப்ரி தலைமையிலான இந்தக் குழு குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகளை பாதுகாக்கவும் வாய் விவாதம் செய்யவும் பயணப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா அரசு தொடர்பில் கடந்த பத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளில் பல அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது. முக்கியமாகச் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவையும் இனப்படுகொலை செய்த ஸ்ரீலங்கா அரசை மயிலிறகால் தடவுகின்ற தீர்மானங்களே.

என்ற போதும்கூட சர்வதேசத்தின் அணுகுமுறைகளை வைத்து தொடர்ந்தும் ஸ்ரீலங்கா அரசும் இனப்படுகொலை புரிந்த குற்றவாளிகளும் தப்பித்து வருகின்றனர். பயங்கரவாத தடைத் சட்டத்திற்கு புதுப் பெயர் சூட்டுவதிலும் திரு கோணமலையிலும் குருந்தூர் மலையிலும் நிலங்களை ஆக்கிரமிப்பதிலும் அரசியல் கைதிகளை விடுவிக்க



ஒரு ஒளியைக் கண்டுபிடிப்பதுபோல நாம் நீதியைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதற்காக நாம் என்ன செய்கிறோம் என்பதை ஒவ்வொரு ஈழத் தமிழ் நெஞ்சமும் கேட்டுக்கொள்ள வேண்டும். இனவழிப்புப் போரினால் ஈழ மண்ணில் உள்ள அத்தனை குடும்பங்களும் அத்தனை மனிதர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் வலி கூட்டு வலி. எங்கள் வலி ஒரு தேசத்தின் வலி. எங்கள் அத்தனை பேருக்குமான வலியிற்கு ஒரு மருந்துதான் இருக்கிறது. அது நீதிதான். எங்கள் காயங்களுக்கான ஒற்றை மருந்தே அதுதான். இந்த நீதியை வலியுறுத்தும் குரலே நலிந்த ஒரு தாயின் மடியில் இருந்துதான் பிறக்கிறது. போரின் தன் துணைவனை பறிகொடுத்த ஒரு பெண்ணின் அடிக்குரலில் இருந்துதான் துவங்குகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை யின் 51ஆவது கூட்டத் தொடர் இந்த மாதம் 12ஆம் திகதி துவங்கியது. கூட்டத் தொடரின் ஆரம்ப நாளில் உலக மனித உரிமைகள் நிலவரம் குறித்து நீண்ட அறிக்கையை அளித்த மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் மிச்சல் பச்லெட் அம்மையார் இலங்கை குறித்தும் கருத்துக்களை வெளியிட்டார். 2021 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான 46/1 என்ற பிரேரணை குறித்து இம்முறை தனது கவனத்தை செலுத்தியிருந்தார்.

அத்துடன் ஜெனீவா அமர்வுகளை முன்னிட்டு இம் மாதம் 7ஆம் திகதி அம்மையார் வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறாத வகையில், பொறுப்புக்கூறல் மற்றும் ஆழமானமறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கி, பொறுப்புக்கூறலை நிறைவேற்றும் வகையில் சட்டங்களை வகுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார். என்ற போதும் பொறுப்புக் கூறலில் ஸ்ரீலங்கா அரசு தனது கடமையை சரியாக செய்யும் என்ற நம்பிக்கையை இழந்திருந்தமையை தனது கடந்த கால அறிக்கைகளில் கண்டோம்.

அத்துடன் இம்முறை அறிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவில் காணப்படும் இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்பது குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளார். இராணுவம் கைப்பற்றியுள்ள தனி யார் காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டுமெனவும்

மாட்டோம், அவர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்வதிலும் தொடர்ந்து மிகுந்த அக்கறையோடும் அவதானத்தோடும் இருக்கும் ஸ்ரீலங்கா அரசு, சர்வதேச மட்டத்தில் இனப்படுகொலைக் குற்றத்தில் இருந்து தப்புவதிலும் கடும் அக்கறையுடன் காய்களை நகர்த்தி வருகின்றது.

இலங்கையில் ஆட்சிகள் மாறினாலும் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் காட்சிகள் மாறுவதில்லை. அதுபோலவே ஆட்சிகள் மாறினாலும் இனப்படுகொலையாளிகளை பாதுகாக்கும் முயற்சிகள் கச்சிதமாக இடம்பெறுகிறது. ஏனெனில் தென்னிலங்கையின் பெரும் அரசியல் முதலீடாக பேரினவாதமே சேமிக்கப்பட்டிருக்கிறது. ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையே யுத்த வீரம் என்று பேசப்படுகிறது. அதனை காப்பவர்கள்தான் ஸ்ரீலங்காவை ஆள முடியும் என்பதே அரச கொள்கை. இந்த நிலையில் தற்போதைய ஆட்சியும் ஸ்ரீலங்காவை பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பதைவிடவும் இனப்படுகொலை குற்ற நெருக்கடியில் இருந்து காத்துவிடத் துடிக்கிறது.

பாரிய பொருளாதார நெருக்கடி. உண்ண உணவில்லை. பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் பசியில் வாடுகின்றனர். இந்த நிலையிலும்கூட தமிழர்களின் நிலத்தை ஆக்கிரமிக்க வேண்டும். அவர்களை ஒடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும் ஸ்ரீலங்காவின் நீதியை என்னவென்பது? இப்படியான கொடுந் தருணங்களிலும் இவைகளை செய்கிற ஸ்ரீலங்கா அரசுமீது இன்னும் மயி லிறகு தடவுகிற ஐ.நாவை என்னவென்பது? உண்மையிலே உலகில் நீதியை நிலைநாட்டத்தான் ஐக்கிய நாடுகள் சபை கூடுகிறதா? மனித உரிமைகளை நிலைநாட்டத்தான் மனித உரிமைப் பேரவை கூடுகிறதா? உண்மையிலேயே நீதி என்ற ஒன்று இருக்குமெனில் நாம் இன்னும் எதையெல்லாம் அதற்காக இழக்க வேண்டும்?

நமது ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 27 செப்டெம்பர் 2022 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com

# ஒருங்கிணைந்த செயற்பாடே தேவை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. சிறிலங்கா பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகருடைய அறிக்கையை பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நீப் சமர்ப்பித்து தனது உரையையும் ஆற்றியிருக்கின்றார்.

மிலேச்சத்தனமான போருக்குப் பின்னர் சிறிலங்காவின் விவகாரம் உலக அரங்கான ஐ.நா.மனித உரிமைகள் பேரவையை அலங்கரிக்கத் தொடங்கி இந்தாண்டுடன் (2012-2022) தசாப்தமொன்று நிறைவுக்கு வந்திருக்கின்றது.

இந்தப் பத்தாண்டுகளில் நீதியைத் தேடிக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா.வின் மூலம் கிடைத்ததென்னவோ அடையாளம் மட்டுமே தவிர, அவர்களின் வெற்றுக்கைகளுடன் தான் இன்னமும் இருக்கின் றார்கள் என்பதே கள யதார்த்தம்.

பாதிக்கப்பட்ட மக்கள் இந்த நிலைமையில் இருப்பதற்கு முதலாவது காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள், இழப்புக்களையும், வடுக்களையும் பயன்படுத்தி வாக்குகளைப் பெற்றுக்கொண்ட ஷதமிழ்த் தேசிய மக்கள் பிரதிநிதிகள்;.

இவர்களைப்பொறுத்தவரையில், போரட்டமும், அதனைத்தொடர்ந்து வரும் அவலங்களான ஆக்கிரமிப்புக்கள், இழப்புக்கள், துன்பங்கள், துயரங்கள் என்று பாதிக்கப்பட்ட மக்களின் அனைத்து உணர்வுபூர்மான விடயங்களையும் தமது அரசில் வாழ்க்கை நீட்சிபெறுவதற்கான முதலீடுகளாக பயன்படுத்திக்கொள்கின்றார்களே தவிர எந்தவொரு விட யத்திலும் தீர்வுகளை பெற்றுக்கொடுத்ததாக பதிவுகளே இல்லை.

இரண்டாவது காரணமாக இருப்பவர்கள் பிராந்திய பூகோள தளத்தில் தமக்குள் மோதிக்கொண்டிருக்கும் வல்லாதிக்க சக்திகள். இதில் இந்தியா, அமெரிக்க தலைமையிலான மேற்குலக கூட்டணியினரும், சீனா, ரஷ்யா தலைமையிலான மேற்குலக எதிர்ப்பு சக்தியினரும் உள்ளடங்கு கின்றனர்.

இந்தத் தரப்பினர் சிறிலங்காவின் கேந்திர மையத்தினை பயன்படுத்தி, இந்து-பசுபிக் பிராந்தியத்தில் யார் செல்வாக்குச் செலுத்துவது என்பதை இலக்காக கொண்டு செயற்படுகின்றார்கள். இதற்காக இந்த நாடுகள் தனித்து ஓட்டத்தினையும், கூட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வது பரகசியமானது.

இந்த நிலையில் தான், கடந்தகாலத்துடன் ஒப்பிடுகின்றபோது ஜெனிவாவில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு பெரும் பின்னடைவுகள் இம்முறை ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சிறிலங்கா அரசாங்கம் பகிரங்கமாகவே சர்வதேச நாடுகளிடத்தில் இறைமையை வைத்து சவால்விடுவதற்கு ஆரம்பித்துவிட்டது. இந்த நிலைமை, எந்ததீர்மானம் எடுத்தாலும் அதற்கு முகங்கொடுக்க தயார் என்பதற்கான சிறிலங்கா அரசாங்கத்தின் வெளிப்பாடாகும்.

அதேநேரம், ஐ.நா. உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், பாதிக்கப்பட்ட தரப்பினரின் விடயங்களுக்கு அப்பால் உயிர்த்த ஞாயிறு சம்பவங்களும், அண்மையில் நடைபெற்ற கோட்டா கோ ஹோம் போராட்டங்களும் அதன் மீதான தாக்குதல்களும் முக்கியமான இடத்தினைப் பிடித்துவிட்டன. இந்தப் பிரதிபலிப்புக்கள் சிறிலங்கா பற்றிய புதிய பிரேரணை வரைவிலும் காணப்படும் நிலையில் இறுதியான தீர்மானத்திலும் நிச்சயம் உள்வாங்கப்படும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.


அதுமட்டுமன்றி, இம்முறை ஜெனிவாவில் தென்னிலங்கை சிங்கள தரப்பும் நீதிகோரி போராட்டத்தினை முன்னெடுக்கின்றது. முஸ்லிம் தரப்பும் உயர்த்தஞாயிறு தாக்குதல்கள் மற்றும் ராஜபக்ஷக்களுக்கான போராட்டம் ஆகியவற்றின்போது கைது செய்யப்பட்டவர்களாக ஜெனிவாவில் முகாமிட்டுள்ளது. அதேபோன்று கிறிஸ்தவர்களும் ஜெனிவாவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு நீதிகோரி வரிசையில் நிற்கின்றனர்.

இதனடிப்படையில் சிறிலங்கா தொடர்பில் பலமுனைகளில் பல தரப்புக்கள் ஜெனிவாவை கையாளுகின்றன என்பது தெளிவாகின்றது. ஆனால் ஐ.நா.உயர்ஸ்தானிகர் மற்றும் சர்வதேச நாடுகள் இந்த விடயங்கள் அனைத்தையும் திரட்சியாக்கி சிறிலங்கா விவகாரம் என்றே கருது கின்றது. பொதுப்படையாகவே பார்கின்றது.

இந்நிலையில், ஐ.நா.வின் அணுகுமுறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆகவே, பாதிக்கப்பட்ட தரப்பிலிருந்து ஜெனிவாவுக்கு படையெடுத்து தமக்குள் நீபெரிது, நான்பெரிது என்று மார்பு தட்டிக்கொள்வதை விடவும், ஒருங்கிணைந்த செயற்பாடுகளின் மூலமே பாதிக்கப்பட்ட மக்களின் விடயத்திற்கு முன்னுரிமை பெற்றுக்கொடுக்க முடியும்.

இந்த புரிதல், ஜெனிவா நோக்கி படையெடுக்கும் தயாகத்தாருக்கும், அவர்களை அழைக்கும் புலம்பெயர்ந்தோருக்கும் முதலில் ஏற்படவேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் இப்போதே சிலங்காவினால் பலமுனைக்களமாகியுள்ள ஜெனிவா, பாதிக்கப்பட்ட தரப்பின் விடயம், பட்டியலில் கடைசியில் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# செந்தமிழ் வானிலே ஞாயிறு தோன்றிடும் அந்தநாள் உன்பசி நிச்சயம் ஆறிடும்



விடுதலை நாயகன் தலைவனின் தடத்திலே
கொடுதலை எனும்நிலை மறுத்திடார் மடத்திலே
மிடுக்குடன் வளர்ந்தவன் எளிமையை அணிந்தவன்
உடுக்கினை இழந்தவன் கையென விரைந்தவன்

பாரதம் பாதகம் ஆனதெம் மண்ணிலே
மாதரம் பாடிஅம் பெய்ததெம் கண்ணிலே
பூரதம் ஊர்ந்திடும் வீதியில் ஏறியே
தாரகம் ஈழமென் றேகினான் விண்ணிலே

ஊனினை உருக்கியே உயிரினைப் பிழிந்தவன்
நீரினை ஒதுக்கியே நெடுஞ்சமர் புரிந்தனன்
தீபமாய் எரிந்தொளி பகர்ந்துமே பறந்தவன்
தியாகமாய் விரிந்தவன் திலீபனே பேரவன்.

நித்திலம் கண்டிடா நித்திய வீரனே
சத்தியம் காத்துமே நிமிர்ந்தமா வீரமே – நீ
சித்தனாய் மேடையில் சிரிப்புடன் இருந்தது
சித்திரம் ஆனதெம் சிந்தனை ஆளுது

செந்தமிழ் வானிலே ஞாயிறு தோன்றிடும்
அந்தநாள் உன்பசி நிச்சயம் ஆறிடும்
தானமாய் உயிருடல் தந்தவா எழுகிறோம்
மானமா வேங்கையே பணிந்துனை தொழுகிறோம்..!

- மது நோமன்

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து...



# கார்ட்டூனிஸ் அஸ்வின் நினைவேந்தலும் ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் நிகழ்வும்






## “அஸ்வினின் இழப்பு தமிழ் ஊடக பரப்பில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு”

**-முன்னாள் வட மாகாண முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன்**

**-யாழ்.கத்தோலிக்க பத்திரிகை பிரதம ஆசிரியர் வண.பிதா றொசன் அடிகளார்**

**-சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்சன்**

இலங்கையின் முன்னணி கேலிச்சித்திரக் கலைஞரும் வடமாகாண ஊடகவியலாளர்களது கூட்டிணைந்த கட்டமைப்பான யாழ். ஊடக அமையத்தின் அங்கத்தவருமான மறைந்த ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சனின் 6 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் அவர் ஞாபகார்த்த ஊடக கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கல் நிகழ்வும் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை (25.09.2022) பிற்பகல் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன், யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வண.பிதா றொசான் அடிகளார், யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் ரகுராம் ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் ஊடகவியலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அஸ்வினின் உறவினர்களும் நண்பர்களும் நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

யாழ்.ஊடக அமையத்தின் நிறுவுனர் தயாபரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வு இரு நிமிட அகவணக்கத்துடன் ஆரம்பமானது. அஸ்வினின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை அவரது பெற்றோர்கள் ஏற்றிவைக்க மலர் மாலையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்சன், யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறை தலைவர் பேராசிரியர் ரகுராம் மற்றும் அஸ்வினின் சகோதரி சுவர்ணா ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து மலர் அஞ்சலியினை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் ஆகியோர் ஆரம்பித்து வைக்க தொடர்ந்து அரங்கில் இருந்தோரும் மலர் அஞ்சலியில் இணைந்துகொண்டனர்.

அதனைத்தொடர்ந்து அஸ்வின் குறித்த நினைவுரைகள் இடம்பெற்றதுடன் விசேட நிகழ்வாக அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை பெறும் யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கை மாணவிக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அஸ்வினின் பெற்றோர் இணைந்து 50 ரூபா பணத்தொகையினையும் நினைவு சின்னத்தையும் வழங்கிவைத்தனர்.

அஸ்வின் குறித்து இடம்பெற்ற நினைவுரைகளில் முதலாவதாக உரையாற்றிய யாழ். கத்தோலிக்க பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம ஆசிரியர் வண.பிதா றொசான் அடிகளார்,

அஸ்வின் கோடுகளால் பேசியவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் தலை சிறந்தவொரு கார்டூனிஸ்ட். Cartoonist ஐ தமிழில் மொழிபெயர்க்கின்ற போது வழக்கமாக எல்லோரும் கேலிச்சித்திரக்கலைஞன் என்று சொல்கிறார்கள். அதில் எனக்கு உடன்பாடு இல்லை. அவர்கள் கேலி செய்வதாக வரைவதில்லை. தங்களின் படங்களின் வழியாக சமூகத்தின் யதார்த்தத்தை பேசுவார்கள். அவ்வாறே அஸ்வினும் தனது படங்கள் வழியாக பேசினார். அஸ்வினை நான் ஒரு தீர்க்கதரிசியாக பார்க்கிறோன். கத்தோலிக்க விவிலியத்தில் பல தீர்க்கதரிசிகள் இறைவாக்கினர்கள் தோன்றி மறைந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் அவ்வப்போது இருக்கின்ற சமூக பிரச்சினைகளை முன்கூட்டியே வெளிகொண்டு மக்களுக்கு எடுத்து கூறுபவர்களாக இருந்தார்கள். அவ்வாறு தான் அஸ்வினின் ஆற்றலும் இருந்தது. இறைவன் கொடுத்த திறமைகளால் அவர் அதனை சீராக செய்து முடித்தார். உண்மையை எவ்வாறு தெளிவாக வரைபடங்கள் மூலமாக வெளிப்படுத்தலாமோ அதனை சிறப்பாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவரது கார்ட்டூன்கள் இன்றைய காலத்திற்கும் பொருந்துவனவாக கதை சொல்லுவனவாக இருக்கின்றதை பார்க்கக்கூடியதாக உள்ளது. இதனாலே அவரை தீர்க்க தரிசன ஓவியர் என விழிக்கமுடிகின்றது. அவர் போதைப்பொருள் குறித்து அன்று வரைந்த கார்ட்டூன் இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள இன்றைய சூழலிலும் நன்கு பொருந்துவதாக உள்ளதனை ஒரு உதாரணமாக சொல்லாம்.

இவ்வாறான அசாத்திய திறமை வாய்ந்த ஊடகவியலாளரை நாம் இழந்திருப்பது தமிழ் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பு. இந்நிலையில் அவரின் பெயரால் அவரது குடும்பத்தினரால் ஊடககற்கை நெறியை தொடரும் மாணவர்களுக்கு கற்றல் உதவிக்காக வழங்கப்படும் புலமைப்பரிசிலை வரவேற்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து உரையாற்றிய பிரதம விருந்தினர் சி.வி. விக்னேஸ்வரன்,

இளவயதில் திரு.அஸ்வின் அவர்களைத் தமிழ்த் தாய் இழந்தமை இலங்கைத் தமிழ் ஊடகப் பரப்பில் ஈடு செய்ய முடியாதொரு பெரும் இழப்பு என்றால் அது மிகையாகாது. அவர் நகைச்சுவைச் சித்திர விற்பன்னராக இருந்து வந்த அதே வேளையில் குறும்பட இயக்குனராகவும் பத்திரிகையாளராகவும் வலம் வந்தவர். ‘கேட்டியளே சங்கதி’ என்ற பத்தி எழுத்திற்காக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தினால் 2011 ஆம் ஆண்டு அவருக்கு சிறந்த பத்தி எழுத்துக்கான அதியுயர் விருதும் (Best Column Writer) கிடைத்தது. இலங்கைச் சினிமாவை வளர்ச்சிப் பாதையில் நகர்த்த வேண்டும் என்றும் அவர் இங்குள்ள கலைஞர்களுக்கு அங்கீகாரங்கள் கிடைக்க வேண்டும் என்றும் அவாக் கொண்டிருந்தார். ஆனால் தமது 36 ஆவது வயதில் திடீரென்று மாரடைப்பால் இறைவனடி சேர்ந்து விட்டார்.

ஒரு சிறந்த நகைச்சுவை சித்திரவியலாளர் பொதுவாக 5 விடயங்களைப்பாவிப்பார். குறியீடு, தலையங்கங்களும் விளக்க அடையாளங்களும், ஒப்புவமை, வஞ்சப்புகழ்ச்சி, மிகைப்படுத்தல் இவை அனைத்து அஸ்வினின் ஓவியங்களில் அடங்கியுள்ளன.

திருநீற்றுக் குறிகள், ஒரு குங்குமப் பொட்டு, வெள்ளைத் தாடி, கண்ணாடி போன்றவற்றைக் கீறி அதன் மேல் வேட்டி சால்வையைப் போர்த்தி வரைந்த வரைவு தான் அவரது ஓவியங்களில் என்னுடைய குறியீடாக அமைந்து விட்டது.

ஒரு முறை முதலமைச்சரான என்னை சுதந்திரமாக நகர விடாமல் என் கட்சி நடந்து கொண்டதை பின்வருவமாறு நகைச்சுவைச் சித்திரத்தில் வரைந்தார் - ஒரு மாடு ஓட எத்தனிக்கிறது. வாலைப் பிடித்து ஒருவர் அதனை நிறுத்தப் பார்க்கிறார். சிலர் ஜல்லிக்கட்டு மாட்டை நிறுத்த எத்தனிப்பது போல் அந்த மாட்டின் மீது தாவிப் பிடித்து நிறுத்தப் பார்க்கின்றார்கள். பின்னால் நின்று ஒருவர் ‘அடக்கு’இ ‘அமுக்கு’ என்று அலறுகின்றார்! ஆனால் மாடோ முன்னேறிச் செல்கின்றது. இதில் மாடு நான், வாலைப் பிடித்தவர் நண்பர் மாவை, ‘அடக்கு’, ‘அமுக்கு’ என்று அலறியவர் சம்பந்தன் ஐயா மற்றும் மாட்டின் மீது தாவி ஏறி நிறுத்தப்பார்த்தவர்கள் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள்!

மாட்டை என் போன்று சித்திரிக்க மாட்டின் நெற்றியில் திருநீற்றுப் பட்டை, கண்ணாடி, சிவத்த குங்குமப் பொட்டு வரையப்பட்டிருந்தன. தாடி இல்லை! எனது முக்கியமான குறியீடாக மாட்டின் கழுத்தைச் சுற்றி பச்சை வெள்ளை சிவப்பு நிறம் கொண்ட சால்வை பறப்பதை வரைந்து காட்டுகின்றார் அஸ்வின்! குறியீடுகளைக் கொண்டு தமது எண்ணங்களை வெளிக்கொண்டு வந்ததில் வல்வராக இருந்தார் திரு.அஸ்வின் அவர்கள்.

ஆகவே சிறந்த ஒரு நகைச்சுவைச் சித்திரக்காரரின் குணவியல்புகளை அஸ்வின் அவர்கள் தமது வாழ்க்கையில் எடுத்துக் காட்டினார். அப்படி இருந்தும் சற்றும் ஆணவம் அல்லது அகந்தை இன்றியே தனது செவ்வியை அந்தக்காலத்தில் வழங்கியிருந்தமை அவரின் அப்போதைய வீடியோ கசட்டின் வாயிலாக வெளிவருகின்றது. அதனை எனக்கு அனுப்பிய அவரின் சகோதரருக்கு எனது நன்றிகள் உரித்தாகுக!

இறைமையே எம்மை வழிநடத்துகின்றது என்பதை அறியாதவன் அகந்தைக்கும் ஆணவத்திற்கும் அடிமையாகின்றான். அப்பேர்ப்பட்டவர்கள் தான் தோல்விகளைக் கண்டு மிரண்டு போகின்றவர்கள். தோல்விகளை இறைவன் கற்றுக் கொடுக்கும் பாடங்களாக ஏற்றுக் கொள்வதே உயர்ந்த மனிதர்களின் பண்புகள். அந்த விதத்தில் அஸ்வின் சுதர்சன் மக்களுள் ஒரு உயர்ந்த மனிதனாக வைத்து புகழப்பட வேண்டியவர்.

அவர் நினைவாக பல்கலைக்கழக ஊடகக் கற்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்குவது சாலச் சிறந்தது. வரவேற்பிற்குரியது என தனது உரையில் தெரிவித்தார்.

தொர்ந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்ஷன் தனது உரையில் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. அமர்வு குறித்து பல கற்பனைகள் இருக்கின்றபோதிலும் அதனை அப்படியே வரையக்கூடிய அஸ்வின் தற்போது இல்லாமை தமிழ் ஊடகப்பரப்பில் பெரும் இழப்பு என்று குறிப்பிட்டார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் நமது ஈழநாடு அனுசரணையுடன் அவரது குடும்பத்தினரால் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் அஸ்வின் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தில் இம்முறை யாழ்.பல்கலைக்கழக்தில் துணை வேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட ஊடக கற்கையில் சிறப்பு கலைமாணியாக இரண்டாம் ஆண்டில் கல்வியைத்தொடரும் மாணவி ஒருவருக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான பணத்தொகையாக ரூபா 50 ஆயிரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பூச்சிய வரைவின் போதாமை




**-தாயகன்-**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத்தொடருடன் சிறிலங்கா தொடர்பில் ஏற்கனவே 46.1 கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட 'சிறிலங்காவில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் ஆயுட்காலம் நிறைவுக்கு வரவுள்ளது.

இந்நிலையில், மேற்படி பிரேரணையை கொண்டுவந்திருந்த, பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் இம்முறையும் புதியதொரு பிரேரணையை கொண்டுவருவதற்கு திட்டமிட்டுள்ளன. அதற்கான பூர்வாங்கச் செயற்பாடாக 'பூச்சிய வரைவு' தயாரிக்கப்பட்டு உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய ஏனையவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வரைவானது, ஆரம்ப நிலையில் இருக்கின்றபோதும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் வலுக்குறைந்தவொன்றாகவே காணப்படுகின்றமையானது நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தினை அளிப்பாக உள்ளது.

குறிப்பாக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக 2012இல் நிறைவேற்றப்பட்ட முதலாவது தீர்மானத்திலிருந்து கடைசியாக நிறைவேற்றப்பட்ட 46.1தீர்மானம் வரையான அனைத்திலும் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை வரையறுக்கப்பட்டு அதனை வலுப்படுத்த வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் இம்முறை வெளிப்படுத்தப்பட்டுள்ள பூச்சிய வரைவில் அந்த விடயம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது பூச்சிய வரைவு என்பதால் குறித்த வரைவே இறுதியாக நிறைவேற்றப்படும் என்றில்லை. ஆனால், வரைவின் ஆரம்பத்திலேயே பொறிமுறையொன்றையும் வெளிப்படுத்தாமையானது, இறுதியாக நிறைவேற்றப்படும் வரைவு மிகப்பெரும் மேம்பாடுகளை கொண்டிருக்கும் என்று கூறுவதற்கு இல்லை.

இதனைவிடவும், வெளியிடப்பட்டுள்ள பூச்சிய வரைவில், இறுதிப் பந்தி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் மனித உரிமைகள் தாக்கம், உள்ளிட்ட சிறிலங்காவின் மனித உரிமைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுமாறு, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தினைக் கோருவதாக உள்ளது.

இந்த விடயங்களைக் கூர்ந்து கவனிக்கின்றபோது, முக்கியமான சில விடயங்களை அவதானிக்க கூடியதாக உள்ளது. விசேடமாக, சிறிலங்கா தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள ஐ.நா.உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சாட்சியங்கள் திரட்டும் பொறிமுறையில் விரைவற்ற செயற்பாடுகளுக்கான காரணங்கள் பற்றிய தீர்மானம் எவ்விதமான நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்துவதாக இல்லை.

மாறாக, உயர்ஸ்தானிகர் அலுலகத்தின் மீது தொடர்ந்தும் சுமைகளைச் சுமத்தும் செயற்பாடுகளையே இணை அனுசரணை நாடுகள் மேற்கொள்கின்றன என்பது வெளிப்படையாகின்றது. இது ஒருவகையில், பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் தாம் நெருக்கடிகளிருந்து தப்பித்துக்கொள்வதற்கான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன், புதிய பூச்சிய வரைவானது, பொறுப்புக்கூறல் சார்ந்த அடுத்த நடவடிக்கைகளை ஆராயும் வாய்ப்பையும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கும் வகையில் இந்த வரைவு அமைந்திருக்கிறது.

அதாவது,ஐ.நா.மனிதஉரிமைகள்பேரவையின் 53 ஆவது கூட்டமாக 2023 ஜூனில் நடைபெறும் அமர்வு மற்றும் 55ஆவது கூட்டமாக 2024 பெப்ரவரியில் நடைபெறும் அமர்வு ஆகியவற்றில் வாய்மொழி அறிக்கைகளை முன்வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, 2023 செப்டெம்பரில் நடைபெறும் 54ஆவது அமர்வில் எழுத்துபூர்வ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், 2024 செப்டெம்பரில் நடைபெறும் 57 ஆவது அமர்வில் சிறிலங்காவின் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான மேலதிக தெரிவுகளை உள்ளடக்கிய விரிவான அறிக்கையை சமர்ப்பித்து, அவை குறித்து கலந்துரையாட வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

இந்த விடயமானது, மறைமுகமாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு கால அவகாசத்தினை வழங்குவதற்கான செயற்பாடாகவே கொள்ள வேண்டியுள்ளது. அதுவும், கடந்த தடவைகளைப் போல் அல்லது, இம்முறை நீண்டகாலத்திற்கான அவகாசம் ஒன்று வழங்கப்பட்டுள்ளமை அப்பட்டமாக தெரிகின்றது.

சிறிலங்காவைப்பொறுத்தவைரயில், சர்வதேசப் பொறிமுறைகளையோ, உள்ளகப் பொறிமுறைகளையோ அல்லது கலப்புப் பொறிமறையிலோ எந்தவொரு விசாரணை நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு தயாராக இல்லை என்பது மிகத் தெளிவானதொரு விடயமாகும்.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் அமர்வில் கூட, சிறிலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மிகத்தெளிவாக அந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். 46.1 தீர்மானத்தை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதை அவர் மிக ஆணித்தனமாக பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ளார்.

அவர், அவ்விதமான வெளிப்பாட்டைச் செய்ததன் பின்னரும், பூச்சியவரைவானது, காலத்தினை நீடிக்கும் வகையிலான உள்ளடக்கங்களை கொண்டிருப்பதாவது, நீதியைத் தோடும் மக்கள் கூட்டத்தினை மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் ஐ.நா.உட்பட சர்வதேச நாடுகள் ஏமாற்றும் நடவடிக்கையாகவே கொள்ளவேண்டியுள்ளது.

இதனைவிடவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகரின் சிறிலங்கா பற்றிய அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் கணிசமான அளவில் உள்வாங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சிறிலங்கா தொடர்பில், அண்மையில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டம், அதனை அடக்குதவற்கு சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள், மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை கோரமாக பயன்படுத்தல் உள்ளிட்ட விடயங்களும் தீர்மானத்தினுள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது, ஏழுதசாப்தமாக பல்வேறு வழிகளில் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழின அழிப்பு விடயத்தினை பின்னகர்த்தி, அண்மைக்கால விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

அதுமட்டுமன்றி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்கள் தமிழர்களுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்தான சிறிலங்காவுக்குமானது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. பூச்சிய அறிக்கையில் இவ்விதமான உள்ளடக்கம் காணப்படுவதால் ஒட்டுமொத்த தமிழினமும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், சிறிலங்கா விவகாரத்திற்கு தீர்க்கமானதொரு முடிவு கிடைக்காது என்ற மனோநிலைக்கு வெகுவாக தள்ளப்படுவதற்கு வழி சமைப்பதாகவே உள்ளது.

இதேநேரம், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தமக்கான நீதியைப் பெறுவதாக இருந்தால் சிறிலங்காவை ஐ.நா.பாதுகாப்புச்சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துமாறே கோருகின்றார்கள். அந்தச் செயன்முறையானது கடினமாக இருந்தால் சர்வதேச தீர்ப்பாயம் போன்ற விசேட பொறிமுறைகளை முன்மொழியுமாறும் கோருகின்றார்கள்.

ஆனால், குறித்த பூச்சிய அறிக்கையில், எந்தவிதமான பொறிமுறைகளையும் முன்மொழியவில்லை. அதுமட்டுமன்றி, 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையில் சிறிலாங்காவை கண்கானித்து அதன்பின்னரே சிறிலங்காவின் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறையை முன்மொழிவதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுபக்கத்தில் உள்ளகப் பொறிமுறை ஊடாக பொறுப்புக்கூறப்படும் என்று சிறிலாங்கா அரசாங்கம் கூறுவதும் வெறுமனே அரங்கப்பேச்சுகள் மட்டும் தான். ஆகவே, அதுவரையில், எவ்விதமான பொறுப்புக்கூறல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படப்போவதில்லை என்பது மிகத் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அந்த அடிப்படையில், தமிழர்களுக்கான ஐ.நாவின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பானது ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டு விட்டதா என்ற வினாவை ஏற்படுத்தியுள்ளதற்கு அப்பால், ஐ.நா.மனித உரிமைகள் பேரவை மீதான தமிழர்களின் நம்பிக்கையும் இழந்து போகும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தப்போக்கானது, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் சர்வதேச அபிமானத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் இழுக்காவே உள்ளது. ஆகவே, பிரித்தானிய தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் சிறிலங்காவின் பொறுப்புக்கூறல் விடயத்தில் காத்திரமானதொரு தீர்மானத்தினை ஷதங்களின் நலன்களுக்கு அப்பால் சென்று சிந்தித்து; வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அச்செயற்பாட்டிலிருந்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தவறுமாக இருந்தால் மேற்குலக நாடுகள் ஜனநாயகம் பற்றிய உரையாடல்களை தவிர்க்க வேண்டிய கட்டாயமாகிவிடும் காலக்கொடுமையே உருவாகும்.

# தீபம் ஏற்றுவதுடன் திலீபன் கனவையும் நிறைவேற்றுங்கள்!

## தமிழ் தேசிய ஆய்வு அமையம் அறிவுரை




"ஈழத் தமிழ் மக்கள் தம் சொந்த தாயக மண்ணில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதுடன் அவர்கள் சுய மரியாதையுடன் சமத்துவமான வாழ்வை வாழ வேண்டும் என்பதுவே திலீபனின் கனவாகும். அந்தக் கனவை மறந்துவிட்டு அந்தக் கனவை கைவிட்டு விட்டு திலீபனின் நிகைவேந்தல் நாட்களில் மாத்திரம் தீபம் ஒன்றை இலகுவாக ஏற்றிவிட்டு அந்தப் புகைப்படத்தை வெளியிட்டு அரசியல் செய்யும் நோக்குடன் தயவு செய்து எத் தரப்பினரும் ஈடுபடக்கூடாது. தீபம் ஏற்றுவதுடன் திலீபனின் கனவையும் நிறைவேற்ற கடுமையாக உழைக்க வேண்டும்.

தியாக தீபம் திலீபன் அவர்களுக்கு தீபம் ஏற்றுவதுடன் அவர் கனவையும் நிறைவேற்ற அனைத்துத் தரப்பினரும் செயலாற்ற வேண்டும் என்று நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் தெரிவித்துள்ளது. அத்துடன் வருடம் முழுவதிலும் இச் சிந்தனையுடன் அனைவரும் பயணிக்க வேண்டும் என்றும் அவ் அமையம் அறைகூவல் விடுத்துள்ளது. இது தொடர்பில் தமிழ் தேசிய ஆய்வு அமையம் மேலும் கூறியுள்ளதாவது:

**தன்னை தந்த திலீபன்**

எதிர்வரும் 26ஆம் திகதி தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவுநாள். அன்றைய தினத்தில் தியாக தீபம் திலீபனுக்கு தமிழர் தாயகம் எங்கும் பெரும் எழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்துவதுடன் நல்லூரில் உள்ள திலீபனின் அவர்களின் நினைவுத் தூபியில் மாபெரும் நினைவேந்தல் நிகழ்வை நடாத்த வேண்டும். அதற்கான சரியான பணிகளில் அனைத்துத் தரப்பினரும் ஈடுபட வேண்டும்.

1987ஆம் ஆண்டு செம்டம்பர் 15ஆம் திகதி ஈழ மண்ணில் நல்லூர் வீதியில் ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமாக தியாக தீபம் திலீபன் அவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தை துவங்கினார். பன்னிரண்டு நாட்களாக துளி நீரையும் அருந்தாமல் எம் மக்களுக்காக தன்னை பசி எனும் தீயில் உருக்கிய திலீபன் அவர்கள் செம்பட்டமர் 26ஆம் திகதி காலை 10.48 மணிக்கு தன்னையே எம் விடியலுக்காய் தந்தார்.

**பசித்திருக்கும் கோரிக்கைகள்**

இந்திய அரசிற்கு எதிராக தனது உண்ணா நோன்புப் போரை ஆரம்பித்த அவர் வலியுறுத்திய ஐந்து அம்சக் கோரிக்கைகள் வருமாறு: 01. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும். 02. சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும். 03. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். 04. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும். 05. தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்பனவே.

இப்போதும் ஈழ மண்ணில் குருந்தூர் மலையில் நில ஆக்கிரமிப்பு பாரிய அளவில் முடுக்கி விடப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் அரசியல் கைதிகள் இன்று வரையில் சிறையில் வாடுகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டம் இன்னமும்




நடைமுறையில் உள்ள நிலையில் தமிழர்களை ஒடுக்க ஸ்ரீலங்கா அரசு புதிய புதிய சட்டங்களை இன்றைக்கும் உருவாக்க முயல்கின்றது. இவ்வாறு தியாக தீபம் திலீபன் அவர்கள் அன்று முன் வைத்த கோரிக்கைகள் இன்றும் தமிழ் மக்களின் கோரிக்கைகளால் பசியில் உழல்கின்றன.

தடைபோட முடியுமா?

இவ்வாறு நிலைமை காணப்படுகையில், தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தலை அனுமதிக்கக்கூடாது என்று ஸ்ரீலங்காவின் முன்னாள் அமைச்சரும் போர்க்குற்றவாளியுமான சரத் வீரசேகர கொக்கரித்துள்ளார். சிங்கள நாடான இலங்கையில் பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை நினைவுகூர முடியாது என்று கூறியுள்ளதுடன் வடக்கு கிழக்கு தமது சிங்கள நாட்டில் உள்ளது என்றும் கோத்தபாயவின் அடிமையான சரத் வீரசேகர ஊடகங்களில் பொங்கியுள்ளார்.

நல்லூர் மண்ணில் மாத்திரமின்றி வடக்கு கிழக்கு முழுவதிலும் தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. திலீபன் வழியில் வருகிறோம் என்று ஜனநாயக அகிம்சை வழிப் பயணத்தில் ஊர்தி பவனி ஒன்று வடக்கு கிழக்கை வலம் வந்து கொண்டிருக்கிறது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பிற நிறுவனங்கள் எனப் பல இடங்களிலும் தியாக தீபத்தின் நினைவேந்தல் இடம்பெறுகிறது.

**திலீபன் எனும் பாடம்**

தமிழீழ மண்ணில் திலீபன் போன்ற மகத்தான போராளிகள் வாழ்ந்து விதைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று சுயநலமும் அதிகார வெறியும் கொண்டவர்களின் அரசியல் அராஜகங்கள் மக்களை முகம் சுழிக்க வைத்துள்ளது. அத்துடன் அவர்கள் தியா தீபம் திலீபன் அவர்களின் நினைவேந்தல் அரங்குகளிலும் அத்தகைய அரசியலை நுழைக்க முற்படுவது எமக்கு பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. தயவு செய்து தியாக தீபம் திலீபன் அவர்களின் முன்னால் உங்கள் சுயநலன்களைத் துறந்து உண்மையான அஞ்சலியை செலுத்துங்கள்.

உங்கள் அரசியலுக்காகவும் அரசியல் இருப்புக்காகவும் நினைவேந்தல் இடங்களைப் பயன்படுத்தாதீர்கள். வெறும் 24 வயதில் இந்த உலகின் அத்தனை ஆசா பாசங்களையும் திறந்து இன விடுதலைக்காக ஈழ மண்ணுக்காக ஈழ மக்களுக்காக தன்னை ஆகுதி ஆக்கிய திலீபன் அவர்களின் வாழ்வையும் போராட்டத்தையும் நாம் இன்னமும் பாடமாக கற்காமல் இருப்பதன் விலைவாகவே இத்தகைய கப்பான நிகழ்வுகள் இடம்பெறுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

**திலீபனின் கனவு**

ஈழத் தமிழ் மக்கள் தம் சொந்த தாயக மண்ணில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதுடன் அவர்கள் சுய மரியாதையுடன் சமத்துவமான வாழ்வை வாழ வேண்டும் என்பதுவே திலீபனின் கனவாகும். அந்தக் கனவை மறந்துவிட்டு அந்தக் கனவை கைவிட்டு விட்டு திலீபனின் நிகைவேந்தல் நாட்களில் மாத்திரம் தீபம் ஒன்றை இலகுவாக ஏற்றிவிட்டு அந்தப் புகைப்படத்தை வெளியிட்டு அரசியல் செய்யும் நோக்குடன் தயவு செய்து எத் தரப்பினரும் ஈடுபடக்கூடாது.

தீபம் ஏற்றுவதுடன் திலீபனின் கனவையும் நிறைவேற்ற கடுமையாக உழைக்க வேண்டும். செப்டம்பர் மாத்தின் பன்னிரண்டு நாட்களில் மாத்திரம் திலீபனை பற்றி நினைவு கொள்ளாமல் எக் காலத்திலும் திலீபனை மறவாமல் அவர் கனவை நெஞ்சில் உரமாக்கி இன விடுதலைக்கும் தேச விடியலுக்கும் ஈழ மக்கள் விமோசனத்திற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழ மலரட்டும்!! என்ற தியாக தீபத்தின் தீர்க்கமான சிந்தனைகளை நிதர்சனமாக்கும் வகையில் செயலாற்றுவோம்" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசத்தின் முரண்நகை

**தற்போது வரையில் சர்வதேச நாடுகளில் அமெரிக்கா மட்டுமே சரத்பொன்சேகா, சவேந்திர சில்வா, கமல் குணரட்ன உள்ளிட்டவர்களை தன் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட தடைகளை அறிவித்துள்ளது. இதனை தவிர ஏனைய நாடுகள் சிறிலங்கா படைகள் சம்பந்தமாக அறிந்து இருக்கின்ற போதும் அது குறித்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியதாகின்றது.**

-தேசிகன்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் உடைய அறிக்கையில் சிலங்கா இராணுவ மயமாக்கல் தொடர்ந்து கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது நீண்ட காலமாக காணப்படுமொரு விவகாரமாக உள்ள நிலையில் ஐ.நா.அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொன்றும் புதிய விடயமல்ல.

ஆனால் குறித்த அறிக்கையில், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு இராணுவம் உள்ளிட்ட முப்படையினருக்கு போர் நிறைவுக்கு வந்ததன் பின்னரும் அதிகளவு ஒதுக்கீடுகளை சிறிலங்கா அரசாங்கம் செய்து வருகின்றது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சுட்டிக்காட்டல் மிகவும் முக்கியமானதாக உள்ளது. இவ்வாறு இருக்க வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழர்களின் பூர்வீக நிலங்களை படைகள் ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு உள்ளதோடு அங்கு விவசாயத்திலிருந்து விளையாட்டு மைதானங்கள் வரை அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றமை வெளிப்படையானது.

அதேநேரம் மூன்று பொதுமக்களுக்கு ஒருபடை வீரர் என்ற அடிப்படையில் வடகிழக்கில் இன்னும் படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளமையானது முக்கியமான விடயமாகும்.

இவ்வாறானதொரு சூழலில் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறித்த விடயம் குறிப்பிடப்பட்டிருப்பதானது தமிழர்கள் தொடர்ந்தும் ஒரு போர்க்கால சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்பதாக உள்ளது.

அதேநேரத்தில் சிறிலங்காவின் மனித உரிமைகள் மீறல்கள், பொறுப்புக்கூறல் தொடர்பில் புதிய பிரேரணைக்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வரைவிலும் சிறிலங்காவில் இராணுவ மயமாக்கல் தொடர்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கு தான் சர்வதேசத்தின் இரு முகங்களும் அம்பலமாகின்றன. அதுமட்டுமன்றி கொள்கை ரீதியாக சர்வதேச நாடுகளின் முரண்நகையும் இதுவாகவே உள்ளது. அதாவது இராணுவ மயமாக்கலை குறைக்குமாறு சொல்லுகின்ற அமெரிக்கா உட்பட பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளும் அயல் நாடான இந்தியாவும் மறுபக்கத்தில் சிறிலங்கா படைகளுக்கு பயிற்சிகளையும் உபகரணங்களையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக சீனாவினுடைய ஆய்வு கப்பலின் வருகையை அடுத்து இந்தியா சிறிலங்காவுக்கு கண்காணிப்பு விமானமான டோனியரை வழங்கியுள்ளது மறுபக்கத்தில் கடற்படையினரை அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றுள்ள அமெரிக்க கடற்படை பிரிவு பயிற்சிகள் நிறைவில் டக்ளஸ் முன்ரோ என்ற சிறிலங்கா கடற்படை பயன்படுத்த முடியாது ஒதுக்கிய கப்பலை புணரமைத்து நட்பு ரீதியாக கையளித்துள்ளது. இதனைவிட, ஜனநாயகம் பற்றிய உரையாடலை அதிகமாக வெளிப்படுத்தும் அவுஸ்திரேலியா சட்டவிரோத கடற்பயணங்களை தடுத்தல் என்ற தனது கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக கடற்படைக்கு விசேட ரோந்துக் கப்பல்களையும், விமானப்படைக்கு எரிபொருளையும் தாராளமாக வழங்கியுள்ளது.

ஒரு பக்கத்தில் சிவில் நிர்வாகத்தையும், ஜனநாயக கட்டமைப்புக்களையும், வலுப்படுத்துமாறு கோரும் இந்த நாடுகள் மறுபக்கத்தில் சிறிலங்கா படைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றமையானது சந்தேகங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஏனென்றால், சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான கட்டமைப்பின் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, சிறிலங்கா இராணுவத்தின் உடைய மிலேச்சத்தனமான செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி அவர் ஐநா மனித உரிமை உயர்ஸ்தானிகர் அதன் உறுப்பு நாடுகளின் வதிவிடப் பிரதிநிதிகள் மற்றும் 17சர்வதேச நாடுகளின் தலைமைகள் உள்ளிட்டவர்களுக்கு குறித்த விடயங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

குறிப்பாக தற்போதைய பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ன, இராணுவ தளபதி சவேந்திர சில்வா, ஜெகத் டயஸ் உள்ளிட்டவர்கள் உள்ளிட்ட 67 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பதை வலியுத்தியுள்ள அவர் சாட்சியங்கள் சகிதம் தன்னுடைய அறிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.





ஆகவே சிறிலங்கா இராணுவம் கடற்படை விமானப்படை உள்ளிட்ட அனைத்து படைப்புகள் சம்பந்தமாகவும் சர்வதேச நாடுகள் மிக தெளிவான விவரத்தை கொண்டிருக்கின்றன.

இவ்விதமான சூழலில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகள் எந்த அடிப்படையில் ஒத்துழைப்புக்களை வழங்க முடியும் என்று கேள்வியில் மிகப்பெரும் நியாயப் பாடுகள் உள்ளன.

தற்போது வரையில் சர்வதேச நாடுகளில் அமெரிக்கா மட்டுமே சரத்பொன்சேகா, சவேந்திர சில்வா, கமல் குணரட்ன உள்ளிட்டவர்களை தன் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட தடைகளை அறிவித்துள்ளது.

இதனை தவிர ஏனைய நாடுகள் சிறிலங்கா படைகள் சம்பந்தமாக அறிந்து இருக்கின்ற போதும் அது குறித்த எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியதாகின்றது.

சிறிலங்காவை பொறுத்தவரையில் ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சியில் அமர்ந்திருப்பதானது தமக்கு மிகப்பெரும் பலம் என்றும் தமது காவலாளிகள் என்றும் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தது. அதேபோன்று தான், படைகளும் தமது விசுவாசத்தை ராஜபக்ஷக்கள் மீதே கொண்டிருந்தார்கள்.

கடந்த காலங்களில் தேர்தல் காலத்திலும் ஏனைய காலங்களிலும் ராஜபக்ஷக்கக்கு சேவகம் செய்பவர்களாகவே படைகள் இருந்தனர். ராபக்ஷக்களே தமது சர்வதேச நெருக்கடிகளுக்கான பாதுகாப்பு என்ற பெரும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் காணப்பட்டது.

ஆனால் காலி முகத்திடல் மக்கள் புரட்சி, படைகளின் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த ராஜபக்ஷகள் தலை தெறிக்க ஓடி நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில், படைகள் முழுமையாக புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலடியில் சரணாகதியடைந்து விட்டனர்.

இந்நிலையில் இப்பொழுது படைத் தரப்பானது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத்தொடங்கியுள்ளது. இந்த நிலைமையானது ரணில் விக்கிரமசிங்க, படைத் தரப்புக்குரிய பாதுகாப்பு மற்றும் ஏனைய விடயங்களில் அதீத கரிசனை கொள்வார் என்பதற்கான வெளிப்பாடாகும்.

தற்போதே, கோடடாபயவின் நெருங்கிய சகாவான, ஜெனரல் கமல் குணரட்னவை பாதுகாப்புச் செயலராகவும், ஜெனரல் சவேந்திர சில்வா படைகளின் பிரதானியாகவும் பதவியில் தொடர்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஏனைய கட்டமைப்புகளையும் கடமையாற்றுகின்ற முன்னாள் இன்னாள் இராணுவ அதிகாரிகள் தொடர்ந்தும் பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆக, தலைமை ஆசனத்திற்கான தலை மட்டும் மாறியிருக்கின்றதே தவிரவும், படைகளை பலப்படுத்தி அடக்குமுறைகளைத் தொடரும் சிந்தனை மாறவில்லை என்பது வெளிப்படையாக தெரிகின்றது.

அவ்வாறான நிலையில், 2015இல் தான் பிரதமராக இருந்தபோது ஐ.நா. தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய ரணில் விக்கிரமசிங்க உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளப்போவதாக தற்போது குத்துக்கரணம் அடித்துக் கூறுகின்றார்.

அவ்வாறான விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டாலும் படைகளுக்கு அவர் தண்டனை விலக்களிப்பார் என்பதே யதார்த்தமாகும். ஆக, யார் ஆட்சிப்பீடமேறினாலும், படைகளை காப்பாற்றும் நிகழ்ச்சி நிரல் மட்டும் மாறப்போவதில்லை.

இந்த நிலையில், சர்வதேச சமூகமும், படைகளை குறைக்குமாறு விசனம் வெளியிட்டுக்கொண்டு மறுபக்கத்தில் படைகளை பலப்படுத்துவதற்கு முயல்வதானது, சிறிலங்காவில் கிட்டடிய தூரத்திற்கு ஜனநாயக மயமாக்கல் என்ற விடயம் நடைபெறப்போவதில்லை என்பது வெளிப்பட்டு நிற்கின்றது.

ஆகவே, சர்வதேசம் சிறிலங்கா படைகள் தொடர்பில் முரண்நகையின்றிய தீர்மானம் ஒன்றே இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை வழங்குவதாக இருக்கும்.

# தொழிலாளர்களை வஞ்சிக்கும் “மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம்”

## நீதிமன்ற உத்தரவையும் மீறுகிறதா?

**-க.பார்த்தீபன்-**



கடும் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில் நாட்டு மக்கள் அன்றாடம் தமது உணவுத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு மலையக பெருந்தோட்ட மக்கள் மாத்திரம் விதிவிலக்கல்ல. இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியை சந்திக்காத ஓரளவு ஸ்தீரமான பொருளாதார வளர்ச்சியுடன் காணப்பட்ட காலத்திலேயே பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொண்ட பெருந்தோட்ட மக்களின் தற்போதைய நிலை குறித்து எவ்வித ஒரு விளக்கத்தையும் நான் தரவேண்டிய அவசியம் இருக்காது என நினைக்கின்றேன்.

மலையக பெருந்தோட்ட மக்களை வைத்து பிழைப்பு நடத்தும் பெருந்தோட்ட நிறுவனங்கள் எப்போதும் அவர்களை வஞ்சிக்க, கஷ்டத்தில் தள்ள ஏன் உழைப்பை உறிஞ்ச என்றுமே தவறியதில்லை. எனினும் இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த மக்கள் மீது கருணை காட்ட மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் தவறியுள்ளமை வேதனைக்குரிய விடயமே.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான தேயிலை தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கக்கோரி அண்மைக்காலமாக (இந்த கட்டுரை எழுதப்படுகின்ற தினத்திலும்) தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் அடிப்படை சம்பளமாக 900 ரூபாவும் வரவு செலவு கொடுப்பனவாக 100 ரூபாய் தோட்டத்தொழிலாளி ஒருவருக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என மேன் முறையீட்டு நீதிமன்றின் உத்தரவை மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனி நிராகரித்த வண்ணம் செயற்படுகின்றது.

ஒரு நாளைக்கு 20 கிலோகிராம் அல்லது அதற்கு மேல் கொழுந்தினை பறிக்கும் தொழிலாளர்களுக்கே ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்க முடியுமெனவும், இல்லாவிடின் தொழிலாளர்கள் பறிக்கும் ஒவ்வொரு கிலோ கொழுந்திற்கும் 50 ரூபாய் என்ற அடிப்படையில் கொடுப்பனவை வழங்க முடியுமெனவும் தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். மேன் முறையீட்டு நீதிமன்றின் உத்தரவு கடந்த மாதம் வெளியான நிலையில் இந்த மாதம் 10ஆம் திகதி (சம்பளத் தினம்) தாம் வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆயிரம் ரூபாய் வீதம் சம்பளம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்ததாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாத சம்பளத்தை முழுமையாக எதிர்ப்பார்த்திருந்த தொழிலாளர்கள் அம்மாதத்துக்குரிய சம்பள சீட்டை பெற்றபோது தொடர்ந்தும் தாம் ஏமாற்றத்துக்குள்ளாக்கப்பட்டிருப்பதை அறிந்து விசனத்தை வெளியிட்டுள்ளனர். பல தோட்டங்களில் நாள் சம்பளம் வழங்கப்படாது, பறித்த தேயிலைக்குரிய கொடுப்பனவுகளே வழங்கப்பட்டிருந்தன.

“நான் 17 நாட்கள் வேலைக்குச் சென்றிருந்தேன் ஆகவே 17,000 ரூபாய் சம்பளம் கிடைக்குமென எதிர்பார்த்தேன். எனினும் ஒரு சில நாட்களுக்கே ஆயிரம் ரூபாய் சம்பளம் கிடைத்தது ஏனைய நாட்களுக்கு நான் பறித்த கொழுந்தின் அடிப்படையிலேயே சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.” என மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்திற்கு உட்பட்ட தோட்டத் தொழிலாளி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார்.

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் சுமார் 14 தொழிற்சாலைகள் கொண்ட 18 தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன. மொத்தமாக நான்கு வெவ்வேறு புவியியல் பகுதிகளில் சுமார் 10,560 ஹெக்டேர் தேயிலைத் தோட்டங்களை உள்ளடக்கியதே மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம். ஹட்டன் அப்கோட், மஸ்கெலியா, தலவாக்கலை மற்றும் பண்டாரவளை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள தோட்டங்களில் சுமார் 11,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். (மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத் தகவல்)

“வெயிலோ மழையோ, கொழுந்து இருக்கிறதோ இல்லையோ 20 கிலோகிராம் கொழுந்தை பறித்தே ஆகவேண்டுமென தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வேலை நாட்களும் குறைவு சில மாதங்களில் வாரத்தில் 4 நாட்கள் மாத்திரமே தொழில் வழங்கப்படுகின்றது. ஒரு கிலோவிற்கு 50 ரூபாயை மாத்திரமே வழங்குகின்றனர். சில வயது முதிர்ந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்கள் 6 - 10 கிலோ கொழுந்தையே பறிக்கின்றனர். அவ்வாறாயின் அவர்களுக்கான ஒரு நாள் வருமானம் 300 - 500 ரூபாய் வரையே கிடைக்கும். இதனை வைத்து என்ன செய்ய முடியும்” என ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தோட்டத் தலைவி ஒருவர் தெரிவிக்கின்றார். எவ்வாறெனினும் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு சூழலில், மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய வகையில் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால், மாற்று நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படுமென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற எம்.பியுமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார். “மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனியே மிக மோசமான நிறுவனமாக உள்ளது. நஷ்டம், நஷ்டம் எனக் கொக்கரிக்கும் சில கம்பனிகள், நஷ்டம் என்றால் எதற்கு தொடர்ந்தும் இயங்க வேண்டும்? தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாம் அல்லவா? நிர்வாகங்கள் இலாபம் உழைக்கின்றன. ஏமாற்று வித்தையாகவே நஷ்டம் என்ற கதைக் கூறப்படுகின்றது.” என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் தேயிலை ஏற்றுமதிமூலம் சிறந்த வருமானம் கிடைப்பதாகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தொழிலாளர் ஒருவர் 4 கிலோ பச்சைக்கொழுந்தை பறித்தாலே அவர்களின் சம்பளம் ஈடாகிவிடுகின்றது. 2021ஆம் ஆண்டு ஒரு அமெரிக்க டொலர் 191 ரூபாயாக இருந்த அதேவேளை தற்போது அதன் பெறுமதி 380 ரூபாவை அண்மித்துள்ளது. பறிக்கப்படும் கொழுந்து மூலம் நிறுவனங்களே இலாபம் அடைவதாகவும், அதாவது நாளொன்றுக்கு சுமார் 6 ஆயிரம் ரூபாவிற்கு பணியாற்றிய பின்னரே தொழிலாளர்கள் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை கோருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இதுத் தொடர்பில் மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் எவ்விதமான ஆக்கபூர்வமான பதிலையும் தொழிலாளர்களுக்கு இதுவரை வழங்கவில்லை. நாளாந்தம் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் அவர்களால் கோடிக்கணக்கில் இலாபமடையும் நிறுவனங்கள் கூட கரிசனை கொள்ளாமை குறித்து தொழிலாளர்கள் கவலையடைந்துள்ளனர். ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளம் என்பது இற்றைக்கு 7 வருடங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கோரிக்கையாகும். எனினும் அதனைக்கூட தொழிலாளர்களுக்கு வழங்க பெருந்தோட்ட நிறுவனம் தயாராக இல்லை என்பதை என்னவெனக் கூறுவது?

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப தொழிலாளி ஒருவருக்கு 3,250 ரூபாய் நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் முன்வைத்திருந்தார். எனினும் ஆயிரம் ரூபாய்க்கே முக்கி முணங்கும் நிறுவனங்கள் 3,250 ரூபாயை வழங்கப்போவது இல்லை என்பதே யதார்த்தம்.

எனினும் தமக்கான ஆயிரம் ரூபாய் என்ற நியாயமான நாளாந்த சம்பளத்தையேனும் வழங்க வேண்டுமென்பதே மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்திற்கு உட்பட்ட தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் கோரிக்கையாக காணப்படுகின்றது.

# புரிந்துகொள்ள வேண்டிய இந்தியாவின் நிலைப்பாடு

-தந்திரீகன்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தியப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே ஆற்றிய உரை மிகவும் முக்கியமானது. அவர் தனது உரையின்போது,

'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த தமது அர்ப்பணிப்புகளில் சிறிலங்கா அரசாங்கத்தினால் குறிப்பிடக் கூடிய முன்னேற்றங்கள் இல்லாமை குறித்து இந்தியா கவலை கொள்ள வேண்டியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குதல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துதல் ஆகிய மூன்று விடயங்களையும் அதிகாரப்பகிர்வு மற்றும் அரசியல் தீர்வுக்கான முக்கிய விடயங்களாகவும் அவர் தனது உரையில் முன் மொழிந்திருக்கிறார்.

'இலங்கைத் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் வகையிலான, ஐக்கிய இலங்கை கட்டமைப்பிற்குட்பட்ட அரசியல் தீர்வே இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த இந்தியாவின் நிலையான நோக்கம்' என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

'விரைவாக தேர்தல்களை நடத்துவதன் மூலம் மாகாண சபைகளை செயற்படுத்துவது, இலங்கையின் அனைத்து பிரஜைகளும் வளமான எதிர்காலத்திற்கான அவர்களின் அபிலாஷைகளை அடைய உதவும் என்றும், இது தொடர்பாக இலங்கை உடனடி மற்றும் நம்பகமான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், 13ஆவது திருத்த அமுலாக்கம், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குதல் போன்ற விடயங்களை இந்தியா பலமுறை வலியுறுத்தியிருந்தாலும், இப்போது, தான் முதற்தடவையாக, அரசியல் தீர்வு விடயத்தில் சிறிலங்கா முன்னேற்றங்களை காணவில்லை என்பதை சர்வதேச அரங்கில் முதற்தடவையாக பதிவு செய்துள்ளமை என்பது மிகவும் கவனமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகின்றது.

தமிழ் மக்களில் பெரும்பாலனவர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் இந்தியா தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிரந்தரமான தீர்வொன்றைப் பெற்றுத்தரும் என்ற அபரீதமான நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியா, பிராந்தியத்தின் தலைமை நாடாக இருப்பதாலும், நீண்டகாலமாக தமிழர்கள் விடயத்தில் அக்கறைகளை வெளிப்படுத்தி வருவதாலும் தமிழர்கள் இவ்விதமான அபரீதமான நம்பிக்கையை வைத்திருப்பதில் தவறுகள் இல்லை.

ஆனால். இந்திய பிரதிநிதி இந்திரா மணி பாண்டேயின் உரையை அபரீதமான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் மீண்டுமொருதடவை செவிமடுப்பது காலத்தின் கட்டாயமாகின்றது.

அந்த உரையில், இந்தியா அதிகாரங்களை பகிர்வதற்கு எதிரான தரப்பாக இல்லாதபோதும் 13ஆவது திருத்தச் சட்டத்தினையே தமிழர்களுக்கான அதியுச்ச அதிகாரப்பகிர்வாக கருதுகின்றது என்பது பகிரங்கமாகியுள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இந்தியா வட,கிழக்கு இணைந்த பகுதியை தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பாக ஏற்றுக் கொண்டிருந்த போதும் தற்போது இணைந்த வட,கிழக்கில் தமிழர்கள் கோரும் சமஷ்டியை பெற்றுக்கொடுப்பதற்கு தயராக இல்லை என்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

ஆனால் இந்தியா தனது ஒப்பந்தத்தினை உயிர்ப்புடன் வைத்துக்கொள்வதற்காக அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் மாகாணசபை முறைமை நீடிக்க வேண்டும் என்பதில் கரிசனையாக உள்ளதோடு, தேர்தல்கள் தொடர்ந்தும் தாமதப்பட்டுச் செல்லக்கூடாது என்பதிலும் உறுதியாக உள்ளது.

இந்தவிதமான நிலைப்பாடானது, சிறிலங்கா அரசியல் தளத்தில் தனது பிராந்தியச் செல்வாக்கை இழந்து விடக்கூடாது என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது என்பாத வெளிப்படுகின்றது.

ஆக, இந்தியா, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு தயாரில்லாத அதேநேரம், மாகாணசபை அதிகாரங்களுக்கு அப்பால் சிந்திப்பதற்கு தயாரில்லை என்பதும் புலபட்டுள்ளது.




> இந்தியா பொறுப்புக்கூறல் சம்பந்தமாக விவகாரத்தை பொருட்டாகக் கொள்ளாது இருப்பதற்கு காரணம் இந்தியாவும் உள்ளே போரின் பங்காளிகளில் ஒருதரப்பு என்பதாலாகும். இறுதிப் போரின் போது இந்தியப் படைகளும் புலனாய்வு கட்டமைப்புகளும், இராஜதந்திர தரப்புக்களும் சிறிலங்கா அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக செயற்பட்டமை பரகசியமான விடயமாகும்.

இந்தியாவினுடைய இந்த நிலைப்பாடு இப்பொழுது மிகத் தெளிவாக உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவின் ஊடாக தமிழ் மக்கள் தாயகமான வடக்கு, கிழக்கு இணைந்த பூமியில் சுயநிர்ணய அடிப்படையிலான சமஸ்டி தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் என்ற இலக்கை அடைதல் என்பது கானல் நீரான ஒரு விடயம் என்பதே கசப்பான உண்மையாக இருக்கிறது.

ஆகவே இந்தியாவின் ஊடாக காய்களை நகர்த்துபவர்களுக்கும், இந்தியா மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கும் இப்போது இரண்டு தெரிவுதான் முன்னாள் உள்ளது.

முதலாவது, இந்தியாவுடனான அணுகுமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி தமிழர்களின் அபிலாஷைகளை முழுமையாகச் ஏற்கச் செய்வதற்காக நகர்வுகளைச் செய்ய வேண்டும். இல்லாது விட்டால், மாகாண சபை முறைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

ஆனால் தமிழ்த் தரப்பினைப் பொறுத்தவரையில், 13ஆவது திருத்தச்சட்டத்தினை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதேபோன்று அணுகுமுறைகளில் மாற்றங்களைச் செய்யப்போதும் இல்லை. மேற்குறிப்பிட்ட இரண்டு விடங்களில் ஒன்றையேனும் பின்பற்றினால் அவர்களின் உள்ளூர் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பதே அடிப்படையில் காரணமாகின்றது.

அதேநேரம் இந்தியாவைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேல்சென்று அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு இயலாத நிலையில் உள்ளது. அதற்கு முதல் காரணம் இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு மேலாக அழுத்தங்களை பிரயோகிக்க முயன்றால் இலங்கை அரசாங்கம் நிச்சயமாக முழுமையான சீன சார்பு நிலையையும் என்ற அச்சம் இந்தியாவுக்கு உள்ளது.

அதுமட்டுமன்றி, இந்தோ-பசிக் மூலோபாயத்தில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுடன் அணிசேர்வது என்ற முடிவினையும் சிறிலங்கா முடிவெடுக்கலாம். அது அவ்விதமான ஒரு சூழல் ஏற்படுமாக இருந்தால் இந்தியாவின் பிராந்திய தலைமைத்துவம் மற்றும் செல்வாக்குக்கு பலத்த அடியாகவே கொள்ள வேண்டும்.

அதேநேரம் அதியுச்ச அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக பகிரங்கமான முறையில் இந்திய கருத்துக்களை சிறிலங்காவிடம் வெளிப்படுத்துமாக இருந்தால் அல்லது சமஷ்டி கட்டமைப்பை முன்னிலைப்படுத்தி பிரதிபலிப்புகளை செய்யுமாக இருந்தால் நிச்சயமாக சிறிலங்கா அரசாங்கம் தமது 'இறைமைக்குள்' இந்தியா தலையிடுகிறது என்ற கருத்தை பரப்பி சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இந்தியாவுக்கு எதிரான வெறுப்பை மேலும் வலுவாக உருவாக்கிவிடுவார்கள்.

இவ்விதமான நிலைமையானது, எதிர்காலத்தில் இந்திய ஆட்சியாளர்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு வழிவகுத்துவிடும் என்பதில் இருவேறு கருத்துக்கள் காணப்பட முடியாது. அதுமட்டுமின்றி இந்தோ, பசிபிக் பிராந்தியத்தில் சீனாவினுடைய அகலக்கால் வாய்ப்பும் மிக வேகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்த அடிப்படையில் தான் தமிழர்கள் இந்த விடயத்தினை கையாள வேண்டி உள்ளவர்களாக உள்ளனர்.

அதேநேரம் இந்தியா தமிழ் மக்கள் வலிந்துகோரி நிற்கும் பொறுப்புக்கூறல் பற்றிய தனது வெளிப்பாடுகளை தொடர்ச்சியாக தவித்து வருகிறது. 2012ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபொழுது சிறிலங்கா தொடர்பான பிரேரணையை இந்தியா ஆதரவளித்து வாக்களித்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் தொடர்ச்சியாக நடைபெற்ற மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் சிறிலங்கா தொடர்பான பிரேரரணைகள் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பங்களில் இந்தியா நடுநிலைமை வகிக்கும் முடிவையே எடுத்து வருகிறது இதுகூட இந்தியா சிறிலங்கா அரசாங்கத்தை பகைத்து விடக்கூடாது என்பதற்கான ஒரு முக்கிய நிலைப்பாடாகவே கொள்ளவேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி இந்தியா பொறுப்புக்கூறல் சம்பந்தமாக விவகாரத்தை பொருட்டாகக் கொள்ளாது இருப்பதற்கு காரணம் இந்தியாவும் உள்ளே போரின் பங்காளிகளில் ஒருதரப்பு என்பதாலாகும். இறுதிப் போரின் போது இந்தியப் படைகளும் புலனாய்வு கட்டமைப்புகளும், இராஜதந்திர தரப்புக்களும் சிறிலங்கா அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக செயற்பட்டமை பரகசியமான விடயமாகும்.

அப்படி இருக்கின்ற பொழுது இந்தியா பொறுப்புக்கூறல் பற்றி வலியுறுத்துவதாக இருந்தால் ஏறக்குறைய நிகழ்ந்த மிலேச்சத்தனமான விடயங்களுக்கு தானும் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதேநேரம், சிறிலங்கா அரசாங்கமும் இந்தியாவை நோக்கி விரலை நீட்டுவதற்கு தயங்காது. இந்த அச்சத்தின் காரணமாகவே பொறுப்புக்கூறல் விடயத்தில் இந்தியா அடக்கி வாசிக்கிறது.

இவ்வாறான நிலையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் தமது அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் இழைக்கப்பட்ட மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு உரிய பொறுப்புக் கூறலும் அவசியம் என்பதில் உறுதியாக உள்ளார். இந்த இரண்டு விடயங்களையும் நமது இருகண்கள் போன்று கருதுகிறார்கள்.

ஆனால் இந்தியா மேற்குறித்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் என்றுமே தனது நிலைப்பாட்டை மாற்றப்போவதில்லை. அப்படியானால் இந்தியாவின் மீதான நம்பிக்கையும், எதிர்பார்ப்பின் மீதானதுமான விளைவுகள் தான் என்ன?

# மகாராணி எலிசபெத் உலக ஆளுமையின் அடையாளம்

- பூமிகன் -

இந்த நூற்றாண்டின் வரலாற்று நிகழ்வு தான் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவு. முதிர்ந்த 96 வயதிலும் அவர் ஆளுமையின் சிகரமாகவே இருந்தார். அவருடைய திடீர் மறைவு ஒருநொடி உலகப் பந்தை நிறுத்தி இயக்கியிருக்கின்றது.

ஆம், எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி என்கிற இரண்டாம் எலிசபெத் மகாராணி விடைபெற்று விட்டார். உலக நாடுகள் பலவற்றையும் தனது படைபலத்தாலும், தந்திரத்தாலும் கைப்பற்றி காலனிகளாக்கி மிகப் பெரிய சாம்ராஜ்யமாக பிரித்தானியா விளங்கியது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், பல நாடுகளுக்கு சுதந்திரங்களை வழங்கியது பிரித்தானியா, அத்தருணத்தில் சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய இராச்சியத்தின் அரியணையில் 1952ஆம் ஆண்டு அமர்ந்தார் இரண்டாம் எலிசபெத் மகாராணி.

21 ஏப்ரல் 1926 அன்று லண்டனில் உள்ள மேஃபேரில் பிறந்தவர் எலிசபெத் மகாராணி தனது 25ஆவது வயதில் அரியணையை ஏற்று 70ஆண்டுகள் அதிலிருந்தார். இதன்மூலம் பிரித்தானிய வரலாற்றில் அதிககாலம் மகாரணியாக வலம் வந்தவராக உள்ளார்.

எலிசபெத் பதவியேற்றபோது, பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில், அதன் பின்னர் வந்த சர் அண்டனி ஈடன், பொரிஸ் ஜோன்சன் தொடங்கி, லிஸ் ட்ரஸ் வரை 15 பிரதமர்களை அவர் நியமித்து அவர்களோடு இணைந்து பணியாற்றியும் உள்ளார். இறுதியாக மகாராணி எலிசபெத், உயிரிழப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக பிரித்தானியாவின் புதிய பிரமதராக தெரிவு செய்யப்பட்ட லிஸ் ட்ரஸ்ஸுக்கு வாழ்த்து தெரிவித்திருந்தார்.

கடந்த 2021ஆம் ஆண்டு மகாராணி எலிசபெத்தின் கணவரும், எடின்பரோ கோமகனுமான பிலிப் காலமானார். கணவர் மறைவையடுத்து அவரது உடல் நலம் குன்றியது. மகாராணி எலிசபெத் உடல்நிலை மோசமானதைத் தொடர்ந்து அவரது மகன்களும், இளவரசர்களான சார்ல்ஸ், எட்வர்ட், ஆண்ட்ரூ, மகள் ஆனி ஆகியோர் அவருடனேயே இருந்தனர்.

இராணியின் மூத்த மகனான இளவரசர் சார்ல்ஸின் மகன் வில்லியமும் அவருடனேயே இருந்தார். வெளிநாட்டில் இருக்கும் மற்றொரு மகன் ஹரியும், அவரது மனைவி மேகனும் கூட லண்டனுக்கு வந்து மகாராணியுடன் தங்கியிருந்தனர்.

எலிசபெத்தைப் பொறுத்தவரையில், மகாராணியாவதற்காகப் பிறந்தவர் அல்ல அவர், காலத்தின் நிர்ப்பந்தத்தால் மகாராணியாக்கப்பட்டவர். அவரது பெரியப்பாவான அரசர் எட்டாம் எட்வேர்ட், இரண்டு முறை விவாகரத்து பெற்ற வொலிஸ் சிம்ப்சன் என்பவரை மணக்க விரும்பியபோது, பிரித்தானிய மக்கள் கொதித்தெழுந்தனர். தங்களது மகாராணிக்கு இரண்டு முன்னாள் கணவர்கள் உயிரோடு இருப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால், வொலிஸ் சிம்ப்சனை மணந்து கொள்வதற்காகத் தனது மணிமுடியைத் துறக்க முடிவு செய்தார் எட்டாம் எட்வேர்ட் மன்னர்.

இதனையடுத்து, பட்டத்துக்கு அடுத்த வாரிசான எலிசபெத்தின் தந்தை ஆறாம் ஜோர்ஜ் பிரித்தானிய அரசராகினார். பத்து வயது அலெக்ஸாண்ட்ரா மேரி, விண்ட்சர் பட்டத்து இளவரசியாகிறார். 1952இல் தனது 56 வயதில் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் தூக்கத்தில் உயிரிழக்கும்போது, இளவரசி எலிசபெத், காதலித்துக் கரம் பிடித்த தனது கணவரான கிரீஸ் இராஜ குடும்பத்தைச் சேர்ந்த பிலிப் மௌண்ட்பேட்டனுடன் ஆப்பிரிக்காவின் கென்யா நாட்டில் சுற்றுப்பயணத்தில் இருந்தார்.

எலிசபெத் மகாராணிக்கு கிரீடம் மட்டுமல்ல, எல்லாமே தேடி வந்தன. காதலித்துக் கைப்பிடித்த கணவருடன் 73ஆண்டு



தொடர்ந்து மணவாழ்க்கை நடத்திய இரண்டாம் எலிசபெத் மகாராணி, அவரது வாழ்க்கையில் சந்தித்த வரலாற்று நிகழ்வுகள்தான் எத்தனை எத்தனை?

குறிப்பாக, மன்னர் முறையை ஒழிக்க வேண்டும் என்று விரும்பிய பிரதமர்களையும், தங்களது மக்கள் செல்வாக்கிற்குப் பிறகுதான் மகாராணி அந்தஸ்து என்று கருதிய பிரதமர்களையும் தனது மௌனத்தாலும், புன்னகையாலும் எதிர்கொண்ட அவரது இராஜதந்திரத்தை நினைத்தால் வியப்பு மேலிடுகிறது.

அரசியலமைப்பு அங்கீகாரம் பெற்ற மன்னராட்சி முறை என்பது சற்று வித்தியாசமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்துக்கும், பிரதமரின் தலைமையிலான அமைச்சரவைக்கும்தான் அனைத்து அதிகாரங்களும். ஆனால், அரியணைக்கு என்று சில அதிகாரங்கள் இல்லாமல் இல்லை. நாடாளுமன்றம் நிறைவேற்றும் எந்தவொரு மசோதாவும் பக்கிங்ஹாம் அரண்மனையின் அனுமதி பெற்ற பிறகுதான் சட்டமாகும்.

பிரித்தானியாவில் இன்னொரு மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. பிரித்தானிய பிரதமராக இருப்பவர் ஒவ்வொரு புதன்கிழமையும், பிரதமர் இல்லம் அமைந்துள்ள இலக்கம் 10, டௌனிங் தெருவிருந்து, அரண்மனைக்குச் சென்று மகாராஜா அல்லது மகாராணியை சந்திக்க வேண்டும். அவர்களுக்குள் நடக்கும் கலந்துரையாடல் அவர்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்கள். என்னதான் மக்கள் செல்வாக்குப் பெற்ற பிரதமராக இருந்தாலும் அவர் கிரீடத்தின் கேள்விகளுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர் என்பது தொடர்ந்து பின்பற்றப்பட்டது.

பிரதமர்களுடனான சந்திப்புகளில் எலிசபெத் மகா ராணியார் எதுவும் பேசுவதில்லை. அவர்கள் சொல்வதை அமைதியாகக் கேட்பதுடன் சரி. அப்படி அவர் பேசிய நிகழ்வுகள் வெளியில் தெரியாது. ஆனால், எலிசபெத் மகாராணியை மதிக்காத பிரதமர்களான ஹெரால்ட் வில்சன், மார்க்ரெட் தாட்சர், டொனி பிளேயர் உள்ளிட்டவர்களும், ஒரு கட்டத்தில் மகாராணியின் மௌனத்துக்கு முன்னர் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதுதான் வரலாற்று உண்மை.

மகாராணியார், பிரித்தானிய சாம்ராஜ்யம் அஸ்தமித்து விட்டது என்பதை அவர் உணர்ந்திருந்தார். தனது அதிகாரம் பெயருக்கு மட்டும்தான் என்பதையும் அவர் அறிந்திருந்தார். பிரித்தானியா எதிர்கொண்ட பிரச்சினைகளையும் சரி, தனது குடும்ப வாழ்க்கையில் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் சரி இரண்டாம் எலிசபெத் புன்னகையுடனும் மௌனமாகவும் கடந்து போனதால்தான், அவரால் 70 ஆண்டுகாலம் மகாராணியாகத் தொடர முடிந்தது.

மன்னராட்சி முறை ஒழிக்கப்பட வேண்டுமா என்று நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 19 சதவீதம் பேர் மட்டும்தான் குடியரசுக்கு ஆதரவு தெரிவித்தனர். பிரித்தானிய அரசி இரண்டாம் எலிசபெத்துக்கு மக்கள் மத்தியிலான ஆதரவு குறித்த வாக்கெடுப்பில் 86 சதவீதம் பேர் அவர் தொடர வேண்டும் என்று விரும்பினர்.

வரலாற்று நாயகியாக விடைபெறும் இரண்டாம் எலிசபெத், பிரித்தானியாவின் கடைசி மகாராணியாக இருக்கக் கூடும். ஆனால், 70 ஆண்டு காலம் நீண்டு நின்ற அந்த மகாராணியின் இடத்தைப் புதிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸால் மட்டுமல்ல, வேறு யாராலுமே வரலாற்றில் நிரப்பிவிட முடியாது.

ஏனென்றால் மறைந்த மகாரணியாரின் உடலம் அடக்கம் செய்வதற்கு முன்னதாகவே, அரண்மனைக்கு முன்னால் குழுமியிருந்த பொதுமக்களில் கறுப்பினத்தவர்க்கு கைலாகு கொடுக்க மன்னர் மறுத்தமை காணொளியில் பரவலாகியுள்ளது.

ஆகவே , சார்ள்ஸின் ஆரம்பமே சர்சையுடன் தான் தொடங்குகின்றது. அதேநேரம், தற்போது கிரீடத்தின் கீழ் இருக்கும் 14 நாடுகளைச் சமாளிப்பதொன்றும் இலகுவான காரணமாக இருக்கப்போதவில்லை. நவீன லிபரல் கொள்கைகள் மேலெழுந்து வரும் நிலையில், மன்னராட்சி எவ்வளவு காலத்திற்கு தாக்குப்பிடிக்கும் என்று பெருங்கேள்வியும் உள்ளது.

இவற்றையெல்லாம் விடவும், அரண்மனைக்குள் காணப்படும் பிச்சல்பிடுங்களுக்கு கூட சார்ள்ஸ் முகங்கொடுக்க வேண்டியும் உள்ளது. குடும்ப விவகாரங்களை வெளிக்கிழம்பாது பாதுகாக்க வேண்டிய தலையாய சவால்கள் நிறைந்த பணிகளையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

வரலாற்று நாயகியாக விடைபெறும் இரண்டாம் எலிசபெத், பிரித்தானியாவின் கடைசி மகாராணியாக இருக்கக் கூடும். ஆனால், 70 ஆண்டு காலம் நீண்டு நின்ற அந்த மகாராணியின் இடத்தைப் புதிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸால் மட்டுமல்ல, வேறு யாராலுமே வரலாற்றில் நிரப்பிவிட முடியாது.

# நமது ஈழநாட்டின் உதவிக்கரம்













நமது ஈழநாட்டின் வாழ்வாதார திட்டத்தின் கீழ் மாதாந்த உதவியாக யுத்தத்தினால் தமது உடல் அவையங்கள் பாதிப்படைந்து மாற்றுத்திறனாளிகளாக வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வரும் முன்னாள் போராளிகள் மற்றும் பெண் குடும்பத்தலைமையைக்கொண்ட மாவீரர் குடும்பங்களிற்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் இம் முறை தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி குடும்பத்தினருக்கு அத்தியவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டதுடன் புதுக்குடியிருப்பை சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மாவீர் குடும்பம் ஒன்றின் மகனின் கல்விச்செயற்பாட்டிற்கான துவிச்சக்கரவண்டியும் வழங்கி வைக்கப்பட்டது.